மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : இப்பொழுது இருக்கிற நிலவரப்படி 'The Chief Engineer has reported that a preliminary investigation for the construction of the dam across Arani river near Periapalayam in the Tiruvallur taluk, has been taken up by the local officers.' என்று சொல்லப்படுகிறது. இந்தப் பரிசீலனை முடிந்தபிறகு அது பற்றி முடிவு எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவையின் அனுமதியோடு வினு நேரம் நீட்டிக்கப்படுகிறது.

மதுரை மாவட்டத்தில் பாசன வசதிகள்

*197. **வினு—திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம், பழனிப் பகுதியில் பாலாறு திட்டம், பாசலாறு திட்டம் ஆகியவற்றிற்கு ஏற்பாடுகள் செய்யப் பட்டுள்ளதா ?

(இ) ஆம் எனில், முறையே அந்தத் திட்டங்களுக்கு செலவழிக்கப்படும் தொகை எவ்வளவு ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) மதுரை மாவட்டத்தில் பழனி வட்டத்தில் பாலாறு-பொறந்தலாறு, பாப்பலாறு ஆகிய இரு திட்டங்களின் பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன.

(இ)

	திட்டச் செலவு. (ரூபாய் இலட்சத்தில்)
(1) பாலாறு-பொறந்தலாறு திட்டம்	281.60
(2) பரப்பலாறு திட்டம்	39.12

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, இந்தத் திட்டங்கள் எப்பொழுதுமுதல் முறைப்படி செயல்பட இருக்கின்றன என்பதை அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : திட்டப்பணிகள் நிறைவேறிய பிறகு முறைப்படி செயல்படுத்தப்படும்.